முருகப்பெருமான் துணை

**மகான் சச்சிதானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.06.2023, புதன்கிழமை

1. தானவான்கள் தருமவான்களென
   தரணியெங்கும் பரவி நின்று
   ஞானவான்களாக ஆற்றல் பெருக
   ஞானமருளும் அரங்கா வாழ்க
2. வாழ்கயென வாழ்த்தி இனிதே
   வழங்குவேன் அறிவுரை ஆசி
   தாழ்விலா சோபகிருது விடை திங்கள்
   தக்கபடி முப்பானோர் திகதி புந்திவாரம்
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 31 ம் நாள், 14.06.2023, புதன்கிழமை)
3. வாரமதில் சச்சிதானந்தர் யானும்
   வழங்குவேன் உலக நலம் பெற
   பாருலகில் ஆனந்தகதி நிலைபெற
   பாமரரும் அரங்க ஞானி வழியை
4. வழியை ஏற்று வரவெணும்
   வணங்கித் தருமம் தர வேணும்
   அழிவிலா ஞானம் அருளுகின்ற
   ஆறுமுகக் கடவுளை வணங்கி
5. வணங்கிச் சரவணச் சுடரேற்றி
   வழிபாடு தொடர வேணும்
   இணங்கி மக்களுடன் சமதர்ம
   இணக்கம் கொண்டு உலகின்
6. உலகின் ஏழ்மை விரட்டும் சேவையை
   உயர்வாகச் செய்துவர வேணும்
   காலனும் அஞ்சும்படி சேவை
   கட்டமைப்பை பெருக்கி வர
7. வருகவே தேகமன பலமுடன்
   வாசிவசம் பூரணத்துவம்
   முருகப்பெருமானால் நடந்தேறி
   முழுமைபட மாற்றம் காண்கும்

8. காண்கவே அரங்கன் அவதார
கலியினில் உயர் நோக்கமான
ஆன்மீக அரசியல் களமும்
அவசியம் அமைப்பாக மாறி
9. மாறியே சமூகநலம் குறித்து
மக்களிடை அறிவுரையாக
அறிவுத் தெளிவு தரும் ஞானமாக
அரங்கமகான் உபதேசமாகச் சென்று
10.சென்றுமே ஒவ்வொரு மாந்தரையும்
சேவகனாய் செயல் வீரனாய்
நன்றான சீடர்களாய் மாற்றி
ஞானிகள் வெளிப்படும் வண்ணம்
11. வண்ணமுடன் சேவை சிறக்க
வடிவேலனார் இறங்கி வர
மண்ணுலகம் ஞான ஆட்சிபெறும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—